செய்தி வெளியீடு எண்: 163 நாள் : 17.03.2016

**தேர்தல் விதிமீறல்–17.03.2016 வரை அனுமதியின்றி பொது சுவரில் எழுதிய 78,371 புகார்களில் வாசகங்கள் அழிக்கப்பட்டன. 15.03.2016 முடிய பறக்கும்படை, கண்காணிப்புக்குழுவினரால் ரூ.8.52 கோடி பறிமுதல்**

தமிழ்நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதால் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளன. கிருஷ்ணகிரியில் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டு இருந்தபோது, பெங்களூரில் இருந்து வந்த வாகனத்தில் உரிய ஆவணங்களோ, அனுமதியோ இல்லாமல் எடுத்து சென்ற ரூ.20 லட்சம் ரொக்கமும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.98 ஆயிரமும், நீலகிரி மாவட்டத்தில் ரூ.95 ஆயிரமும், திருவள்ளூர் மாவட்டத்தில் ஆந்திரா, சித்தூரில் இருந்து ஆவணங்கள் இல்லாமல் எடுத்துச் சென்ற ரூ.17 லட்சம், திருப்பூர் மாவட்டத்தில் ரூ.64 ஆயிரம், திருநெல்வேலியில் ரூ.2.89 லட்சம் திருச்சி மாவட்ட வாகன சோதனையின் போது ரூ.1.29 லட்சம் உட்பட மொத்தம் ரூ.51,17,240/– ரொக்கம் 15.03.2016 அன்று பறிமுதல் செய்யப்பட்டன. மதுரை, பெரம்பலூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 51,840 மி.லி மதுவகைகள், திண்டுக்கல் மாவட்டத்தில் வேட்டி புடவைகள், டீ.சர்ட்கள், மப்ளர், திருவண்ணாமலை மாவட்டத்தில் 340 சர்க்கரை மூட்டைகள், விழுப்புரம் மாவட்டத்தில் 189 ஸ்டிக்கர் ஒட்டிய ஹெல்மெட்டுகள், 21 ரைஸ் குக்கர்கள் ஆகியவை உரிய ஆவணங்கள் இல்லாததால் பறிமுதல் செய்யப்பட்டன.

மதுரை, கோவை மாவட்டங்களில் அனுமதியில்லாமல் கட்சி கொடி கம்பங்களை நிறுவியது, திண்டுக்கல் மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட கூம்பு வடிவ ஒலிபெருக்கியை பொதுக்கூட்டத்தில் பயன்படுத்தியது, தூத்துக்குடியில் அனுமதியின்றி கட்சி அலுவலகம் திறந்தது போன்ற காரணங்களுக்காக பல்வேறு கட்சிகளை சார்ந்தவர்களின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

நிலையான கண்காணிப்புக்குழு (Static Surveillance Team) சோதனையின் போது சேலம் மாநகரில் ரூ.6.31 லட்சம், தர்மபுரியில் ரூ.95 ஆயிரம், கிருஷ்ணகிரியில் ரூ.1.60 லட்சம், நாமக்கல் மாவட்டத்தில் ரூ.93,900/– நாகப்பட்டினத்தில் ரூ.1.85 லட்சம், நீலகிரி மாவட்டத்தில் ரூ.6.75 லட்சம் உட்பட மொத்தம் ரூ.18,40,295/– ரொக்கம் உரிய ஆவணங்கள் இல்லாத காரணத்தால் பறிமுதல் செய்யப்பட்டன. நாகப்பட்டினம் மாவட்டத்தில் தடைசெய்யப்பட்ட, பதப்படுத்தப்பட்ட 200 கிலோ கடற்குதிரைகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலுக்கு வந்தபின் 17.03.2016 வரை பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்தாக 1,37,711 புகார்களும், தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவித்ததாக 39,108 புகார்களும் பெறப்பட்டன. சுவர்களில் எழுதியது தொடர்பாக வந்த 78,371 புகார்கள் சுவரில் எழுதியதை அழித்து விட்டதால் முடிவுக்கு வந்தன. பொது சொத்துக்கு சேதம் விளைவித்தாக 428 வழக்குகளும், தனியார் சொத்துக்கு சேதம் விளைவித்தாக 192 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**